<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 302/2019

அரசுதரப்பு 3 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேது | வயது | : | 28 |
| தந்தை/கணவர் பெயர் | : | குமார் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 25.07.2023 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை - நான் தற்போது பண்ருட்டியில் குடியிருக்கிறேன். தனலட்சுமி பஸ்ஸில் நடத்துனராக உள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 11.12.2018 அன்று மாலை 4.00 மணியிலிருந்து 4.30 மணிக்குள் செல்வகுமார் பஸ்ஸில் துணை நடத்துனராக இருந்தேன். அப்போது வடலூரிலிருந்து பண்ருட்டி நோக்கி டிரிப் எடுத்து வந்து கொண்டிருந்தபோது சமத்துவபுரம் ஆர்ச் கேட் அருகே வரும்போது ஆஜர் எதிரிகள் மூவரும் வண்டியை மறித்து சண்டை வாங்கினார்கள். அசிங்கமாக திட்டி கல்லாலும், குண்டாலும் பேருந்தின் பஸ் கண்ணாடியை உடைத்தார்கள். டிரைவர் பிரேக் போட்டவுடன் ஜனங்கள் இறங்கிவிட்டார்கள். பஸ்ஸின் முன்பக்க கண்ணாடி உடைந்தது. பஸ் அரைமணி நேரம் நின்றது. டிராபிக் ஜாம்

ஆகிவிட்டது. எதிரிகள் டிரைவரையும், கண்டக்டரை திட்டி விட்டு இனிமேல் வண்டி எடுத்தால் உங்களை தொலைத்து விடுவேன் என்று சொல்லி பல்சர் பைக்கில் சென்று விட்டார்கள். அதன்பிறகு நாங்கள் ஜனங்களை பண்ருட்டி பஸ் ஸ்டாப்பில் இறக்கி விட்டோம். ஓனர் வெளியூர் சென்றிருந்ததால் 7 நாட்கள் கழித்துதான் புகார் கொடுத்தோம். ஓட்டுநர் கலியமூர்த்தி புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ஆம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை - வடலூரில் 4.00 மணிக்கு டிரிப் எடுத்தோம். வடலூர்- பண்ருட்டி ரோட்டில் சம்பவ இடத்தில் ரோடு வேலை நடக்கவில்லை. அந்த பக்கத்து ரோடுகள் மேடு பள்ளம் நிறைந்த ரோடுகளாக உள்ளது. வடலூரிலிருந்து பண்ருட்டி செல்ல 1மணி நேரம் ஆகும். 4.00 மணிக்கு எடுத்து பண்ருட்டி செல்ல நாங்கள் போக வேண்டிய டைம் 4.35 மணி. 35 நிமிடத்தில் செல்லவேண்டும். அந்த இடத்தில் வண்டி வேகமாக போனால் புழுதி பறக்கும், கற்கள் பறக்கும். ரோட்டு ஓரமாக இருக்கும் வீடுகள் முன்பு கட்டைகள் போட்டிருப்பார்கள். பொதுவாக பஸ் வீட்டுவாசலில் போவதாக தகராறு வந்திருக்கிறது. எங்கள் பஸ்ஸில் அவ்வாறு தகராறு வரவில்லை. நான் துணை நடத்துனர். என் இருக்கை பின்பக்கமாக இருக்கும். கொஞ்சிக்குப்பத்திலிருந்து காடாம்புலியூர் காவல்நிலையம் 3 கிமீ தூரம் இருக்கும். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து எழுதி கொண்டார்கள். பண்ருட்டிக்கு போகும்போது காடாம்புலியூர் காவல்நிலையம் வழியாகத்தான் போகவேண்டும். போகும்போது காவல்நிலையத்தில் சொல்லவில்லை. நான் அந்த டிரிப்போடு இறங்கி விட்டேன். திரும்ப அந்த பஸ் வடலூருக்கு போனதா என்று தெரியாது. எதிரியை அன்று பார்த்த பிறகு இன்றுதான் பார்க்கிறேன். வேறு எங்கும் பார்க்கவில்லை. எதிரிகள் பஸ்ஸை நிறுத்தவில்லை, பஸ்

கண்ணாடியை உடைக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பஸ் கண்ணாடி உடைந்ததாகவும், நான் பார்த்ததாகவும், ஜோடித்து வைத்த வழக்கிற்கு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2, 3 ஆம்எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - சம்பவ சமயத்தில் பஸ்ஸில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 35 பேர் இருந்தார்கள். நான் பின் இருக்கையில் உட்கார்ந்திருந்தேன். சத்தம் கேட்டுதான் முன்னாடி வந்தேன். நாங்கள் செல்போன் வைத்திருந்தோம். ஓனருக்கு செல்போன் மூலமாக தகவல் சொன்னோம். போலிசார் என்னை 17 ஆம் தேதி விசாரித்தார்கள். காடாம்புலியூர் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அன்றைய டியூட்டியில் இருந்தவர்களை வரசொன்னார்கள், சென்றோம். போலிசார் விசாரணையில் எதிரிகளின் அங்க அடையாளங்கள் எதுவும் சொல்லவில்லை. முதல் விசாரணையில் சொன்னதுபோன்று சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், போலிசார் சொல்லி கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 302 /2019

அரசுதரப்பு 4-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொய்யாமொழி | வயது | : | 62 |
| தந்தை/கணவர் பெயர் | : | பெருமாள் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 25.07.2023 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்

முதல் விசாரணை - நான் தற்போது குறிஞ்சிப்பாடியில் வசிக்கிறேன். செல்வகுமார் பஸ்ஸில் மேனேஜராக உள்ளேன். 11.12.2018 அன்று மாலை 4.00 மணிக்கு வடலூரிலிருந்து பண்ருட்டி செல்வதற்கு டிரிப் எடுத்து சென்றோம். அன்று அந்த பஸ்ஸில் சென்றேன். ஆஜர் எதிரிகள் மூவரும் பஸ் கண்ணாடியை உடைத்தார்கள். சமத்துவபுரம் ஆர்ச் கேட் அருகில் சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் 3 பேரும் பல்சர் வண்டியில் கருங்கற்கள், கோலிகுண்டு ஆகியவற்றால் பஸ் கண்ணாடியை உடைத்து விட்டார்கள். டிரைவர் பிரேக் போட்டு வண்டியை நிறுத்தி விட்டார். பஸ்ஸை நிறுத்தியவுடன் கீழே இறங்கி விட்டோம். எதிரிகள் மூவரும் பஸ்ஸை ஓட்டினால் வண்டியை கொளுத்தி

விடுவோம் என்று சொன்னார்கள். நிறைய வண்டிகள் வந்து டிராபிக் ஆகிவிட்டது. பின்னர் வண்டியை எடுத்து பண்ருட்டி சென்று விட்டோம். ஜனங்களை இறக்கி விட்டு கண்ணாடி மாற்ற வண்டியை எடுத்து சென்றோம். திரும்ப லைனில் விட்டு விட்டோம். புகார் கொடுத்தால் பஸ்ஸை கொளுத்தி விடுவோம் என்று சொன்னதால் முதலாளி வந்து சொன்ன பிற்பாடுதான் டிரைவர் கலியமூர்த்தி புகார் கொடுத்தார். உடைந்த கண்ணாடியின் சேதமதிப்பு ரூ.11000/- இருக்கும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 ஆம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை - வடலூரிலிருந்து பண்ருட்டி வரை சாலையை அகலப்படுத்த சாலை பெயர்க்கப்பட்டுள்ளது. எங்கள் வாகனம் குறிப்பிட்ட நேரத்தில் எடுத்து குறிப்பிட்ட நேரத்தில் பண்ருட்டி வரவேண்டும். சம்பவ இடத்தில் ரோடு மோசமாக இருப்பதால் வாகனம் செல்லும்போது புழுதி ஏற்படும், கற்கள் சிதறி ஓடும். வீட்டு வாசலில் பஸ் போவதை தடுக்க கட்டைகள் போட்டிருப்பார்கள். சம்பவம் முடிந்த பிறகு 1 மணி நேரம் வண்டி நின்றது. அந்த இடத்திலிருந்து காடாம்புலியூர் காவல் நிலையம் 3 கிமீ தூரம் இருக்கும். போலிசார் எங்கள் வண்டிக்கு வருவதற்கு முன்பே நாங்கள் கிளம்பி விட்டோம். காடாம்புலியூர் காவல்நிலையம் வழியாகதான் சென்றோம். பஸ்ஸிற்கு பாதுகாப்பாகத்தான் போனேன். காடாம்புலியூர் காவல்நிலையத்தை கடக்கும்போது புகார் கொடுக்கவில்லை. பண்ருட்டி அடைந்து பின்னர் திரும்ப வரும்போது புகார் கொடுக்கவில்லை. கடலூர் வந்து கண்ணாடி மாற்றப்பட்டது. பஸ் திரும்ப டிரிப் எடுக்க சென்றது. என் கையிலும், டிரைவர் கண்டக்டர் வசம் செல்போன் இருந்தது. ஓனரிடம் சம்பவம் பற்றி உடனடியாக சொல்லவில்லை. அன்றைய தினம் இரவு ஓனரிடம் தகவல் சொன்னேன். ஓனருக்கு

தகவல் கொடுத்த பிற்பாடும் புகார் கொடுக்கவில்லை. போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள். புகார் கொடுத்தால் பஸ்ஸை கொளுத்தி விடுவோம் என்று எதிரிகள் சொன்னதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் கூறுவதுபோல் எதிரிகள் பஸ்ஸை வழிமறிக்கவும் இல்லை, அசிங்கமாக திட்டவும் இல்லை, குறிப்பாக அன்றைய தினம் பஸ்ஸில் பயணிக்கவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஜோடிக்கப்பட்ட புகாருக்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பஸ் கண்ணாடி உடைய வில்லை என்றால் சரியல்ல. டிரைவரின் கவனக்குறைவால் பஸ் கண்ணாடிக்கு பாதிப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2, 3 ஆம் எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - செல்வகுமார் பஸ் நிறுவனத்திற்கு 1 பஸ் உள்ளது. 2 டிரைவர், 2 கண்டக்டர் உள்ளனர்.பண்ருட்டியில்தான் ஆபிஸ் உள்ளது. எனக்கு பண்ருட்டியில்தான் ஆபிஸ். நான் மறுநாள் ஆபிஸிற்கு போனேன். 18 ஆம் தேதி போலிசார் விசாரித்தார்கள். 2018 ல் அந்த பஸ் 7 வருட பழைய வாகனம். போலிசார் என் விசாரணையில் டிரிப் ஷிட் கேட்டு வாங்கவில்லை. முதல் விசாரணையில் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஜோடிக்கப்பட்ட புகாருக்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 302 /2019

அரசுதரப்பு 5 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வாழைமுத்து | வயது | : | 65 |
| தந்தை/கணவர் பெயர் | : | குமாரசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 25.07.2023 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை - நான் தற்போது காத்தாண்டிகுப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய கூலி வேலை செய்கிறேன். 11.12.2018 அன்று மாலை 4.20 மணியளவில் சொந்தகாரர் வீட்டிற்கு செல்வதற்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்தேன். அப்போது அங்கு கும்பலாக இருந்தது. பஸ் நின்றிருந்தது. போலிசார் இருந்தார்கள். எதிரிகளை நான் அந்த இடத்தில் பார்க்கவில்லை. பஸ் கண்ணாடியை உடைத்து விட்டதாக யாரும் சொல்லவில்லை. கண்ணாடி உடைந்ததை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் 11.012.2018 ல் காடாம்புலியூரில் பஸ் ஏறி அரசுபேருந்தில் சென்று கொண்டிருந்தேன். கொஞ்சிக்குப்பம் என்ற இடத்தில் செல்வகுமார் பஸ் வந்து கொண்டிருந்தது. 4.20 மணிக்கு TN 45 AH 9217 பல்சர் வண்டியில் வடக்கிலிருந்து தெற்காக சென்ற வாகனத்தில் 3 நபர்கள் வந்ததாகவும், செல்வகுமார் பஸ்ஸை நிறுத்த சொல்லி பஸ்ஸின் முன்னால் வழிமறித்து டிரைவர் நிறுத்தியபிறகு கல்லாலும், கோலியாலும் கண்ணாடியை அடித்து உடைத்தார்கள் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

**முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

அமர்வு வழக்கு எண் : 302 /2019

அரசுதரப்பு 6-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ் | வயது | : | 32 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராஜேந்திரன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 25.07.2023 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது கிழிறுப்பில் குடியிருக்கிறேன். டிரைவராக உள்ளேன். 11.12.2018 அன்று கூலிவேலைக்கு காடாம்புலியூர் சென்றேன். அங்கு கூட்டமாக இருந்தது. செல்வகுமார் பஸ் கண்ணாடியை யாரோ உடைத்து விட்டதாக சொன்னார்கள். அடித்தவர்களை நான் பார்க்கவில்லை. சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையிலும் அதையேதான் சொன்னேன்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் 11.012.2018 ல் நெய்வேலிக்கு சென்று விட்டு காரில் திரும்ப வரும்போது கொஞ்சிக்குப்பம் என்ற இடத்தில் செல்வகுமார் பஸ் வந்து கொண்டிருந்தது. 4.20 மணிக்கு TN 45 AH 9217 பல்சர் வண்டியில்

வடக்கிலிருந்து தெற்காக சென்ற வாகனத்தில் 3 நபர்கள் வந்ததாகவும், செல்வகுமார் பஸ்ஸை நிறுத்த சொல்லி பஸ்ஸின் முன்னால் வழிமறித்து டிரைவர் நிறுத்தியபிறகு கல்லாலும், கோலியாலும் கண்ணாடியை அடித்து உடைத்தார்கள் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 302 /2019

அரசுதரப்பு 7-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவகண்டன் | வயது | : | 35 |
| தந்தை/கணவர் பெயர் | : | முருகவேல் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 25.07.2023 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை - நான் தற்போது கீழிருப்பு கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். 11.12.2018 அன்று கூலி வேலைக்கு காடாம்புலியூர் சென்றேன். காலையில் போய் முந்திரிக்கு களை வெட்ட சென்றோம். 6.00 மணிக்கு திரும்ப வரும்போது காடாம்புலியூர் கும்பகோணம் ரோட்டில் ஆர்ச் கேட் அருகே வரும்போது கூட்டமாக நின்றிருந்தார்கள். விசாரிக்கும்போது பஸ் கண்ணாடியை உடைத்து விட்டதாக சொன்னார்கள். நான் எதையும் பார்க்கவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் நான் காடாம்புலியூரில் பஸ் ஏறி வடலூர் நோக்கி செல்லும்போது சமத்துவபுரம் என்ற இடத்தில் செல்வகுமார் பஸ் வந்து கொண்டிருந்தது. 4.20 மணிக்கு TN 45 AH 9217 பல்சர் வண்டியில் வடக்கிலிருந்து தெற்காக சென்ற வாகனத்தில் 3 நபர்கள் வந்ததாகவும், செல்வகுமார் பஸ்ஸை நிறுத்த சொல்லி பஸ்ஸின் முன்னால் வழிமறித்து டிரைவர் நிறுத்தியபிறகு கல்லாலும், கோலியாலும் கண்ணாடியை அடித்து உடைத்தார்கள் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை